


பி. ஸ்ரீ.

101. ராவணன் உறுதி

'உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்' என்று பாரதியார் குறிப்பிடுகின்ற 'வாக்கின் ஒளி' கலைஞர்களுக்கும், சிறப்பாகக் கவிஞர்களுக்கும், உள்ளொளியாகிய உண்மையொளியின் பிரதிபலிப்பாகும். இத்தகைய வாக்கின் ஒளிக்கு ஒரு தனி வசிகர சக்தி உண்டு.

இத்தகைய சக்தி தான், ஒரு வகைக் கவிதாசந்நதம் போன்ற தருமாவேசத்துடன் பேசி முடித்த விபீஷணனது அறவுரையிலும் ஆவேசித்து, அந்த அரக்கர் பேரவையையும் மெய்ம்மறந்து கேட்கச் செய்தது. ஐம்புலன்களும் செவிப் புலனாகிக் குவிந்து கேட்டன என்றாலும் பொருந்துவதாகும்.

உண்மையொளி கூசிக் குலைந்தது!

இந்தச் சக்தியைக் குலைப்பது தான் எப்படி? இல்லாவிட்டால் ராவணன் நோக்கம் பலிக்குமா?

இச் சமயம் ராவணனுடைய அறிவு-மாட்சி தன்னை அறியாமலே வேலை செய்கிறது, கையோடு கை அறைந்த ஓசை சபையின் கவனத்தை ராவணன் பக்கமாய் இழுத்து விடுகிறது.

வீராவேசம் ஜொலிக்கிறது முகத்திலே, —இப்போது ஆசனத்தில் சற்று முன்னோக்கி அமர்ந்திருக்கும் நிலையிலே. கையோடு கை அறைந்த பின் விரல்கள் இறுகப் பொருந்திப் பூட்டிக் கொள்கின்றன.

ஓர் இடிச் சிரிப்பு வெண்ணிலாப் பொழிகின்றது, பயமுறுத்தும் கோரப் பற்கள் தோன்ற.

அந்த அட்டகாசச் சிரிப்பிலே மார்பில் கிடக்கும் அந்த முத்து மாலைதான் எப்படியெல்லாம் அழகு பொழிகின்றது! அந்த மார்பு அந்த முத்துச் சரங்களுடன் குலுங்கும் மாட்சிதான் என்ன!

அந்தப் பரந்த மார்புடன் தோள்-தலங்களும் சேர்ந்து குலுங்குகின்றன. அந்தச் சிரிப்பின் வெள்ளொளியிலே, விபீஷணன் ஏற்றிக் காட்டிய உண்மை-விளக்கு முழுதும் மழுங்கிப் போய்விட்டது.

பேச்சின் முன்னுரை

இனி, ராவணன் தன் கட்சியை எடுத்துரைக்கப் போகிறான். அதற்குப் பீடிகை போடுவதைக் கேளுங்கள்:

இச்சை நல்லன
உறுதிகள் இசைக்குவன்
என்றாய்,
பிச்சர் சொல்லுவ
சொல்லினை; என்பெரு
விறலைக்
கொச்சை மானுடர்
வெல்குவர் என்றனை;
குறித்த(து)
அச்ச மோ? அவர்க்(கு)
அன்பினோ? யாவதோ?
ஐயா!

[உறுதிகள்—உறுதி மொழிகள். இசைக்குவன்—சொல்லுவேன். பிச்சர்—பித்தர். விறலை—வலிமையை. கொச்சை மானுடர்—அற்ப மனிதர். என்றனை—என்றாய். குறித்தது—நீ இப்படிக் குறிப்பிட்டது. அன்பினோ—அன்பினாலோ.]

'உறுதி மொழிகளை உரைப்பேன் என்று தொடங்கிப் பித்தர் பிதற்றும் பேச்சுப் பேசினாயே!' என்கிறான் ராவணன்.

இச்சை நல்லன
உறுதிகள்

என்று கூறுவதால், தன் இச்சைக்கு இனிய வார்த்தைகளையே உறுதி மொழிகளாகக் கருதுகிறான் ராவணன் என்பது தெளிவு.

இப்படியெல்லாம் பிதற்றுவதற்குக் காரணம் 'அந்த அற்ப மனிதர்களிடம் உனக்குள்ள அச்சமோ? அன்போ?' என்று கேட்கிறான்.

அச்ச மோ? அவர்க்கு
அன்பினோ? யாவதோ
ஐயா!

என்று கேட்பவன், தன் கேள்விகளுக்கு விபீஷணனிடம் விடையொன்றும் எதிர் பாராமலே மேலும் பேசுகிறான்.

'மானுடப் பசுக்கள்'

இந்தப் பீடிகைக்குப் பின் ராவணன் விபீஷணன் பேச்சைத் தனித் தனியாகக் கூறு செய்து கண்டிக்கிறான். முதலாவது, தான் மானுடரை வெல்ல வரம் பெற்றதில்லை என்பது குறித்துப் பேசுகிறான்.

திசையானைகளை வென்றதற்கு வரம் பெற்றதுண்டா? வெள்ளிமலையைச் சிவபெருமானோடு தூக்கவேண்டுமென்று வரம் பெற்றதுண்டா? ஒவ்வொரு செயலுக்கும் தனித்தனி வரம் பெற்றிருக்க வேண்டுமா?

மானுடரை உணவுப் பொருளாகக் கருதுகின்ற அரக்கர் கோன் 'மானுடப் பசுக்கள்' என்று குறிப்பிட்டு விவகரிப்பதைக் கேளுங்கள்:

ஈங்கு மானுடப்
பசுக்களுக்(கு) இலைவரம்
என்றாய்,

தீங்கு சொல்லினை;
திசைகளை உலகொடும்
செருக்கால்

தாங்கும் யானையைத்
தள்ளி, அத் தழல்நிறத்-
தவனை

ஓங்கல் ஒன்றொடும்
எடுக்கமுன் வரங்கொண்ட
துண்டோ?

[ஈங்கு – இதில்; வரம் கேட்டதில். மானுடப் பசுக்கள் – அலட்சியம் செய்யத் தக்கவர் மானுடர் என்பது குறிப்பு. இலை – இல்லை. என்றாய் – என்று. திசைகளை உலகொடும் செருக்கால் தாங்கும் யானை – திசை யானைகள். தழல் நிறத்தவன் – தழல் போலும் செந்நிற மேனியனான சிவபெருமான். ஓங்கல் – மலை. ஓங்கல் ஒன்றொடும் – அப்பெருமான் வீற்றிருந்த ஒப்பற்ற வெள்ளி மலையோடும்.]

தனக்கு மானுடப் பசுக்கள் வெகுதுச்சமாய்த் தோன்ற விபீஷணத் தம்பிக்கு மட்டும், தன்னோடு ஒரு வயிற்றில் பிறந்திருந்தும், மானுடர் பலசாலிகளாய்த் தோன்றுவதுதான் எப்படியோ?

எனக்கு நிற்க; மற்(று)
என்னொடிங் கொருவயிற் —
றுதித்த

உனக்கு மானுடர்
வலியராம் தகைமையும்
உளதோ?

[எனக்கு நிற்க – என்னைப் பற்றி இருக்கட்டும். தகைமை – தன்மை.]

தனக்குப் பேச்சுத் திறன் இல்லை என்று விபீஷணனே ஒப்புக் கொண்டிருக்கிறான். ராவணனோ,

சொல்லும் மாற்றங்கள்
தெரிந்திலை

[மாற்றங்கள் – வார்த்தைகள்.]

என்கிறான் விபீஷணனை நோக்கி. சொல்லத் தக்க வார்த்தைகள் இன்ன வென்று தேர்ந்தெடுத்துப் பேசவே விபீஷணனுக்குத் தெரியவில்லை யென்கிறான். மானுடப் பசுக்களைப் புகழ்வதும் பேச்சாகுமா?

சாபம் பலிக்காது!

ராவணனுக்கு வர பலம் இருப்பது போல் நந்தியின் சாபம் போன்ற சில சாபங்களும் உண்டு. ஆனால் சாபங்களைக் குறித்துக் கொஞ்சமும் அஞ்சத் தேவையில்லை என்கிறான் ராவணன்:

வந்த சாபங்கள்
எனைப்பல; அவைசெய்த
வலிஎன்?

இந்தி ராதியர்
சித்தர்கள் இயக்கர்நம்
இறுதி

சிந்தி யாதவர்
யார்? அவர் நம்மைஎன்
செய்தார்?



[என்னைப் பல – எத்தனையோ பல. வலி – வலிமை. என் – என்ன. இயக்கர் – யட்சர். நம் இறுதி – நமது மரணத்தை.]

'நமக்கு வந்த சாபங்களுக்கு வரம் புண்டோ?' என்று கேட்கிறான். தேவர் சித்தர் இயக்கர் ஆதியருள் ராவணாதியருக்கு இறுதி சிந்தியாதவர்களும் இருக்க முடியுமா!

தோற்றுப் போனவர்கள் வாய்க்கு வந்தபடி ஏசுவதும் புலம்புவதும் இயல்பு தானே; அந்தப் புலம்பல் – பேச்சுக்கும் ஏச்சுக்கும் சாப மென்று பெயர். இதில் அஞ்சுவதற்கு என்ன இருக்கிறது!

வாயால் சபிக்க அஞ்சுவோரும் மனத்தால் சபித்துக் கொண்டுதானே இருப்பார்கள்! சபித்தலுக்கும் ஜபித்தலுக்கும் பயப்படுமா ராவணன் பகுத்தறிவு!

வெளியிட்ட சாபங்கள், சிந்தித்த சாபங்கள்—இவற்றில் ஒன்றுமே நம்மை ஒன்றும் செய்ததில்லை; ஒன்றுமே செய்யவும் முடியாது. இது ராவணன் கொள்கை. இங்கே சாபமோ, ஜபமோ பலிக்க வழியில்லை.

'வாலிக்குத் தோற்கவில்லை; எனக்கே தோற்றேன்!'

இனி, வாலிக்குத் தான் தோற்க நேர்ந்ததிலும் ஒன்றும் குடி முழுகிப் போய் விடவில்லை என்கிறான். எந்த வாலிக்கு ராவணன் தோற்றானோ அந்த வாலியை வதைத்த மனிதன் வல்லவன் அல்லனோ? இல்லை, ஒருபோதும் இல்லை என்கிறான் ராவணன்.

தன்னை எதிர்த்தவர்களின் பலத்தில் பாதி வாலிக்குப் போய்விடுமல்லவா? 'அப்படி ஒரு வரம் வாலிக்கு உண்டென்பதை நான் அறிந்தேனில்லை; அது அந்த மானுடப் பசுவுக்குத் தெரிந்திருந்தது' என்கிறான்.

அதனால் மனிதன் என்ன செய்தான்?

வாலி தன்னையும்
மனிதனும் மறைந்துநின்(று)
எய்தான்.

ஆனால் ராவணன் அந்த வாலி-வலிமையின் இரகசியத்தை அறிந்திராத காரணத்தினாலேயே தோல்வியுற்றானாம்:

அரங்கில் ஆடுவார்க்(கு)
அன்புபூண் டுடைவரம்
அறியேன்;
இரங்கி யான்நிற்ப,
என்வலி அவன்வயின்
எய்த,
வரங்கொள் வாலிபால்
தோற்றனன்; மற்றும்
வேறுள்ள
குரங்கெ லாம்எனை
வெல்லும்என்(று) எங்ஙனம்
கோடி?

[அரங்கில் ஆடுவார் – சபையில் ஆடுகின்ற சிவபெருமான். அன்பு பூண்டு உடை வரம் – பக்தி பண்ணி அதனால் பெற்றுள்ள வரம். இரங்கி – வருந்தி. நிற்ப – நிற்க. என் வலி – என் வலிமை. அவன் வயின் – அந்த வாலியிடம். கோடி – கொள்கிறாய்.]

வாலியை எதிர்த்து நின்ற தன் வலிமை தான், அவனை யடைந்து தன்னை வென்று விட்டது என்று கூறிக் கொள்வதில் ராவணனுக்கு ஒரு திருப்தி. இவனை வென்றது இவன் தானே: வாலி இல்லையே!

வாலியைக் கொன்றவனுக்குத் தான் வலிமையில்லை!

இவ்விதமாகத் தன் அறிவு மாட்சியும் பேச்சுத்திறனும் சூழ்ச்சித் துணிவும் தோன்றப் பேசிவரும் ராவணன், கடைசியாக ராமனுக்கு வலிமையே இல்லையென்று சித்தாந்தம் செய்து விடுகிறான். எப்படி?

ராம பராக்கிரமத்தைப் பாராட்டுகிறவர்கள் வாலி வதத்தைக் கூட வற்புறுத்த மாட்டார்கள். மறைந்து நின்று கொன்ற வீரமும் வீரமா?

சிவதனுசை முறித்தான் என்பார்கள். ஏழு பெரிய மராமரங்களைத் தொளைத்தான் என்பார்கள்.

மேலும், 'காட்டுக்கு வந்தானே, பகையரசனுக்குத் தோற்று ஓடி வந்து விட்டான்!' என்று கேட்பார்கள். கூனி சூழ்ச்சி தானே அரசிழந்து வனம் புகுவதற்குக் காரணம்!

ராம பராக்கிரமத்திற்கு விபீஷணன் ராவணனையே ஒரு சாட்சியாகக் குறிப்பிட்டான் என்றும் கருதலாம். ராம லட்சுமணரோடு போர் புரிந்து வென்று சீதையை வசப்படுத்திக் கொண்டான்!

சேனை நாயகன் சொன்னதுபோல்,

வஞ்சனை மனிதரை
இயற்றி, வாள்நுதல்
பஞ்சென மெல்லடி
மயிலைப் பற்றுதல்
அஞ்சினர் தொழில்

என்று கருதப்படலாமே.

இப்படியெல்லாம் ராம பராக்கிரமத்திற்குப் புகழ்மாலை சூட்டலாம். சூட்டுகிறவன் தானே விபீஷணன்? ஆனால் இந்த வாதம் தவிடு பொடியாகப் போகிறது ராவணனுடைய பகுத்தறிவினாலே!

ராமன் எவ்வளவு அநாயாசமாகச் சிவதனுசை முறித்தான்!

எடுத்தது கண்டனர்,
இற்றது கேட்டார்!

என்பதல்லவா கவி வருணனை?—அந்த மாதிரி, அவ்வளவு அநாயாசமாக ஒடித்தெறிகிறது விபீஷண வாதத்தை ராவணனுடைய பகுத்தறிவு வாதம். எப்படி என்பதை அடுத்த வாரம் பார்க்கலாம்.



சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

102. நாஸ்திக ஈச்வரன்!

'வில்லை முறித்தானே ராமன், அந்தச் சிவ தனுசை உன்னால் வளைக்க முடிந்ததா?' என்று ஒரு கேள்வி. ராவணன் மூளை எளிதில் பதில் சொல்லி விடுகிறது, 'ஊன வில் இறுத்தான்' என்று.

நுண்ணறிவா, பகுத்தறிவா?

நீண்ட காலமாக உபயோகத்தில் இல்லாததால் துரு ஏறி வில் ஊனமாகி விட்டதாம். ஏற்கெனவே முறிந்திருந்த மாதிரி, 'தொட்டவன் மேல் பழி போடுவோம்!' என்ற நிலையில் இருந்ததாம்.

'அடடா, முறிந்த வில்லை முறித்து விட்டானடா வீர பாண்டியன்!' என்று பரிகசிக்கிறது ராவண பராக்கிரமம்.

வில்லிறுத்த இரகசியத்தை இப்படி விண்டு காட்டிய பகுத்தறிவு, மரம் துளைத்த மான்மியத்தை (ஏழு மராமரங்களையும் தான்) எப்படி ஊடுருவிப் பார்த்து விடுகிறது!

ஊன வில்இறுத்(து).
ஓட்டைமா மரத்துள்அம்(பு)
ஒட்டி

என்று நையாண்டி செய்வதைப் பாருங்கள்.

முறிந்த வில்லை முறித்தானும்; ஓட்டை மரத்திற்குள்ளே ஓட்டை போட்டு அம்பை ஓட்டினானும். வயசான மரங்கள், பாவம், உளுத்துப் போயிருக்க வேண்டும்; வண்டு குடைந்திருக்க வேண்டும்.

அப்படி யில்லை யென்று அந்த ஏழு மரங்களையும், ராமன் அம்பு போடுவதற்கு முன், சோதித்துப் பார்த்தவர்கள் உண்டா? ஒரு சோதனைக் 'கமிட்டி' — நிபுணர் குழு — போய்ப் பார்வையிட்டிருக்க வேண்டாமா?

அது போகட்டும். நாடு விட்டுக் காடு வந்ததற்குக் 'கூனி சுந்தரி'யின் சூழ்ச்சி தானே காரணம்; பகையரசன் வலிமை இல்லையே! இதற்கும் பதில் பளிச் சென்று வருகிறது.

பகைவர் புயவலிமையை எதிர்த்து நின்று தோற்றாலும் பாதகமில்லையே: ஒரு பேதைமைப் பெண்ணின் சூழ்ச்சிக்கும் தோற்றுப் போவதென்றால், புயவலிமையோடு அறிவு-வலிமையும் பூச்சியம் என்பதல்லவா பொருள். சூழ்ச்சி செய்தவளும் ஒரு கூனிதானே?

'கூனி சூழ்ச்சியால் அரசிழந்தவன் மனைவியையும் இழந்து விட்டானே. நான் வேடிக்கையாக இழைத்த ஓர் அற்பச் சூழ்ச்சிக்கும் தோற்று!' என்கிறான் ராவணன். 'அண்ணா, நீயும் ராமபராக்கிரமத்தை நினைத்துத்தானே சூழ்ச்சி செய்து சீதையைக் கவர்ந்தாய்!' என்ற குற்றச் சாட்டுக்கு இப்படிப் பதில் சொல்லி விடுகிறான்.

தன் வஞ்சனை 'அஞ்சினர் தொழில்' என்பதை மறுக்கத் தான் எவ்வளவு காரசாரமாகப் பேசுகிறான்! இந்த நிலைமையில் பாட்டு முழுமையும் பார்த்து விடலாமே:

ஊன வில்லிறுத்(து),
ஓட்டைமா மரத்துள்அம்(பு)
ஓட்டிக்
கூனி சூழ்ச்சியால்
அரசிழந்(து) உயர்வனம்
குறுகி,



யான்இ ழைத்திட.
இல்இழந்(து) இன்னுயிர்
சுமக்கும்
மானு டன்வலி
நீஅலால் ஆருளர்
மதிப்பார்?

[மாமரம்-(இங்கே) பெரிய மராமரம். உயர் வனம் – பெரிய காடு. குறுகி – அடைந்து.]

தேளுக்குக் கொடுக்கைப் போல் அமைந்திருக்கிறது, 'இன்னுயிர் சுமக்கும் மானுடன் வலி' என்பது. வலிமையின்றி, அறிவுத் திறனுமின்றி அரசிழந்து, இல்லையும் இழந்தவனுக்கு, வீரம் இல்லாதது போல் மான உணர்ச்சியும் இல்லையாம்.

தன் மனைவியையும் காக்க வலிமையில்லாதவன் உயிரை ஒரு சுமையாக அல்லவா கருதவேண்டும்! காட்டில் எத்தனையோ மரங்களும் கிளைகளும் இல்லையா?

அவற்றைப் பாராது கனிகளைமட்டும் பார்த்த வண்ணம் தன்னுயிரை இன்னுயிராக எண்ணியிருக்கிறானே! உயிர்ச் சுமையை உத்ஸாகமாய்ச் சுமக்கிறானே!

பங்கிம் சந்திரர் ஒரு கதையில் வெள்ளையரோடு போராடித் தோற்றுப் போன இந்தியர்களைக் குறித்து ஒரு விகடம் செய்திருக்கிறார். தோற்றுப் போனவர்கள் எங்கே தான் போனார்கள்? வெகு தூரம் போய்விட வில்லையாம்.

ஷர்பத் புட்டிகள் அடுக்கி வைத்திருந்த இடங்களில் தான் பதுங்கியிருந்தார்களாம். ஷர்பத்தைச் சாப்பிட்டுக் கொண்டே உயிரை விடலாமே! இதற்காகவாவது கொஞ்சம் உயிர்ச் சுமையைச் சுமந்து பார்க்கலாமே என்று எண்ணி விட்டார்களாம்.

இப்படித் தான் இன்னுயிர் சுமக்க ராமனும் இசைந்திருப்பது போலப் பேசுகிறான் ராவணன். இத்தகைய மானுடன் வலிமையே வலிமை – என்பதாகப் பரிகசிக்கிறான். இத்தகைய 'வலிமை'யை மதித்துப் பேசும் விபீஷணன் புத்தியே புத்தி என்று குத்திக் காட்டுகிறான்.

புத்தியைக் கத்திபோல் மிகவும் கூர்மையாகத் தீட்டி வைத்திருக்கும் எதிர் வக்கீலைப் போல் சின்னாபின்னமாக்கி விடுகிறான் விபீஷணன் கட்சியை ராவணன். 'நீ சுத்தமுட்டாள்' என்று ஒரு பட்டமும் கட்டி வைக்கிறான் விபீஷணனுக்கு.



ஆஸ்திக விபீஷணனும் நாஸ்திக ராவணனும்

பிறகு சபையிலுள்ள மற்றவர்களை நோக்கி, 'நல்லது. நாம் புறப்படுவோம் போருக்கு' என்கிறான். இதற்கு மேலும் பேசாதிருந்துவிட மனம் தாளாமல் விபீஷணன் ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறான்.

இந்தக் காட்சியை இதோ பார்த்துக் கொள்ளுங்கள் :

என்று தானுரை
மொழிந்து,' நீ உணர்விலி'
என்னா,
' நன்று போதும்நாம்
எழுகெ'னும் அரக்கனை
நணுகி,
' ஒன்று கேள்இனம்
உறுதி'என்(று) அன்பினன்
ஒழியான்,
துன்று தாரவன்
பின்னரும் இனையன
சொன்னான்.

[உரை மொழிந்து – இவ்வாறு வார்த்தைகளைச் சொல்லி. போதும் நாம் – நாம் போவோம் போருக்கு. எழுக எனும் – எழுக என்று சொல்லுகிற. அரக்கனை – (இங்கே) ராவணனை. நணுகி – நெருங்கி. இனம் – இன்னம். உறுதி–ஓர் உறுதிச் சொல். அன்பினன் – அன்பினனாகி. ஒழியான் – பேச்சு ஒழிந்திருக்க மனம் தாளாதவனாய். துன்று தாரவன் – நெருங்கிய மாலையை அணிந்த விபீஷணன். இனையன – இவ் வார்த்தைகளை.]

இப்பொழுது விபீஷணன் சொல்லப் போகின்ற இந்த உறுதிமொழி தான் என்ன ?

'தன்னின் முன்னிய
பொருளிலா ஒருதனித்
தலைவன்
அன்ன மானுட—
னாகிவந்(து) அவதரித்—
தமைந்தான்,
சொன்ன நம்பொருட்(டு)
உம்பர்தம் சூழ்ச்சியின்
துணிவால் ;
இன்னம் ஏகுதி
போலும்என்(று) அடிதொழு
இரந்தான் (து)

[தன்னின் – தன்னைக் காட்டிலும். முன்னிய – முற்பட்ட. ஒரு – (இங்கே) ஒப்பற்ற. அன்ன மானுடனாகி – அந்த மனிதனாகி. சொன்ன நம் பொருட்டு – (இங்கே) உலகம் பழித்துச் சொல்லுகிற அரக்கராகிய நம் பொருட்டு. உம்பர் தம் – தேவர்களின். சூழ்ச்சியின் துணிவால் – ஆலோசனை வன்மையால். ஏகுதி போலும் – அவனோடு போர் புரியப் போவாய் போலும்.]

பிரத்தியட்சமான ராம பராக்கிரமத்திலேயே அவநம்பிக்கை கொண்டிருப்பவனுக்கு அவதார தத்துவத்திலா நம்பிக்கை பிறந்து விடப் போகிறது. நாஸ்திக மனப்பான்மையைக் காட்டிலும் மோசமானது சர்வ சந்தேக மனநிலை. இந்த நிலையில் பழுத்த அவநம்பிக்கையும் கொழுத்த பகுத்தறிவுமாயிருக்கிறான் ராவணன்.

சிவதனுசை ஊன வில் என்றான். வயிரம் பாய்ந்த ராட்சஸக் காட்டு மரங்களை ஓட்டை மா மரங்கள் என்றான். உடல் வன்மை இல்லாததுடன் மன வலிமையும் இல்லையே யென்று பழித்தான்.

தாய்ப் பாலில் நஞ்சு ஆய்பவரின் மன நிலையுடன் ராமபராக்கிரமச் செயல்களையே துச்சமாகக் காட்டி விட்டவனுக்கு, விபீஷணனுடைய அவதாரக் கொள்கையைத் தூள் தூளாகச் செய்து விட முடியாதா! 'அவதாரமா? விஷ்ணுவின் அவதாரமா! எத்தனை முறை போரில் தோற்றவன் அந்த விஷ்ணு!' என்கிறான்.

'இதற்கு மேல் இன்றைய நாஸ்திகரும் தூஷித்து விடவில்லை' என்று சொல்லத்தக்க நிலையில் ராவணனின் விடை ஆரம்பமாகிறது:

அச்சொற் கேட்(டு)அவன்
ஆழியான் என்றனை;
ஆயின்
கொச்சைத் துன்மதி!
எத்தனை போரிடைக்
குறைந்தான்
இச்சைக் கேற்றன
யான்செய்த இத்தனை
காலம்
முச்சற் றான்கொல்அம்
முழுமுத லோன்என
முனிந்தான்

[ஆழியான் — சக்கராயுதத்தைக் கொண்ட திருமால். ஆயின் - அப்படியானால். கொச்சைத் துன்மதி—இழிவான துஷ்டபுத்தி கொண்ட மூடமே. குறைந்தான் — தோற்றான். முச்சு — மூச்சு. (குறுக்கல் விகாரம்) அற்றான்கொல் - அற்றுக்கிடந்தானோ. அம்முழு முதலோன் - அந்த முழு முதற் கடவுள். முனிந்தான் - கோபித்துப் பேசினான்.]

'நீ உணர்விலி' (மூடம்) என்று ஏற்கெனவே, சொன்னவன் இப்போது விபீஷணனைக் 'கொச்சைப் பேச்சில் இறங்கி விட்ட மூடமே!' என்று விளிக்கிறான். கடவுளைப்பற்றிய பேச்செல்லாம் கொச்சைப் பேச்சே என்பது ராவணன் கொள்கை.

ராவணனைச் சிவ பக்தன் என்கிறார்களல்லவா! தன்னைத் தாழ்த்திக் கொள்ளும் உண்மைச் சிவபக்தனின் தனிப்பெரும் பணிவு எங்கே! 'சிவபெருமானுக்கு நான் ஒரு அங்குலமும் தாழ்ந்தவனில்லையே!' என்று இறுமாந்து 'விசுவரூபம்' கொண்டிருக்கும் ராவண கர்வம் எங்கே!

'தன்னின் முன்னிய பொருளிலா ஒரு தனித் தலைவன்' உண்டு என்பது விபீஷணன் கொள்கை. ராவணனோ தன்னைக் காட்டிலும் பெரியவனாக ஒரு தனித் தலைவனும் இருக்க முடியாது என்னும் கொள்கையில் ஊன்றி நிமிர்ந்தவன்.

ராவணனுக்கு இச்சையே சட்டம்; இச்சையே தருமம்.

இச்சைக்(கு) ஏற்றன
யான்செய்த இத்தனை
காலம்

என்று எவ்வளவு பெருமையாக நிமிர்ந்து பேசுகிறான் பாருங்கள்!


'இச்சையே வரம்பாக - வேறு சட்ட வரம்பின்றி, தரும வரம்பின்றி நான் எத்தனை செயல்கள் செய்திருக்கிறேன், இத்தனை காலமாக! அப்போதெல்லாம் தலையிடாத கடவுளா இப்போது குதித்து வந்து குறுக்கிடப் போகிறான்?' என்பது ராவணன் மன நிலை. விபீஷணனைப் போன்ற கொச்சைத் துன்மதிகள் நிரப்பி வைத்த பொய்ம்மைக் கூடைகளே அறநூல்கள்! அந்தோ, இவர்கள் கோத்து வைத்த ஏடுகளே சமய நூல்கள்! இது ராவணனுள்ளம்.

'அந்தக் காலமெல்லாம் தெய்வம் செத்தா போச்சு!' என்று கேட்கும் கேள்விதான் எத்தகைய கோபாக்கினியிலிருந்து தெறித்து விழுகின்ற கங்கு!

விஷ்ணு உறங்குகிறான்: அது யோக நித்திரை, அறி துயில் என்கிறார்களல்லவா! அறியாத் துயில் என்று கூட ராவணன் ஒப்புக் கொள்ளத் தயாரில்லை. 'அது மரண நித்திரை, விழிப்பே இல்லாத உறக்கம்' என்கிறான்.

மூச்சு இருக்கிறதா என்று சோதித்த வைத்தியன் யார்?

ராவணேச்வரன் இன்றைய நாஸ்திகர்களுக்கும் வழி காட்டிதான்; வழிபடத் தக்க ஈச்வரனும் தான்!



பி. ஸ்ரீ..

103. விபீஷணனை அஞ்சுகிருன்!

பாரதியாரின் பாஞ்சாலி சபதத்திலே திருதராஷ்டிரன் ஸ்ரீ கிருஷ்ணவதாரத்தைக் குறித்துப் பேசத் தொடங்கி விட்டான்.

> ஆதிப் பரம்பொருள் நாரணன் – தெளி
> வாகிய பாற்கடல் மீதிலே...

என்று, ஞானத்தெளிவாகிய அந்தப் பாற்கடலிலிருந்து அவதாரம் இறங்கி வந்ததை அதன் உட்பொருளுடன் குதூகலமாய்த் தன் நாவீறு தோன்றத் தெளிவு படுத்த முயன்ருன்.

திடீரென்று நினைவிற்கு வந்தது, 'ஐயோ, யாரிடம் பேசுகிருேம்!' என்பது. இந்த உள்ளத்திலே இறங்கக் கூடிய விஷயமா இது?

பேய்க்குப் பிரமோபதேசமா?

'**ச**குனியிடம் பேசிக் கொண்டிருக்கிருேம்' என்ற எண்ணம் வந்ததும், பேயிடம் வேதம் உணர்த்தல் போல்,

> கண்ணன் பெற்றி
> உனக்கெவர் பேசுவார்?

என்று வெட்டெனப் பேசி முடித்துக் கொள்கிருன், தன் அவதாரப் பேச்சைத் திருதராஷ்டிரன்.

கண்ணனைக் குறித்த பேச்சு எழுந்ததும் மகாராஜா தன்னை மறந்து அவதார தத்துவத்தில் ஆழ்ந்து போனுன். பகுத்தறிவும் கொஞ்சம் பக்தியோடு கேட்குமாறு பேசினுன். ஆனல் சகுனிமாமாவின் பகுத்தறிவுப் பிரதேசத்திலே மெய்யறிவுக்கோ, ஆழ்ந்த சிந்தனைக்கோ இடமேது!

விபீஷணனும் திருதராஷ்டிரனும்

விபீஷணன் ஸ்ரீ ராமாவதாரத்தைக் குறித்து ராவணனிடம் பேசுவதும் பேய்க்குப் பிரமோபதேசம் செய்வதாகத் தான் முடிகிறது. விபீஷணன் திருதராஷ்டிரனைக் காட்டிலும் தூய பக்தியுள்ளம் வாய்ந்தவன். திருதராஷ்டிரனைப் போல் அவ்வளவு லெளகிக ஞானம் இல்லாதவனுக இருந்தும், அவனைப் போல் திடீரென்று பக்தி பரவசமாகிப் பேசி விடவில்லை: அவதாரம் குறித்துத் திடீரென்று பிரஸ்தாபஞ் செய்து விடவில்லை.

கற்புக் கனலாகிய ஜானகியை உலக அன்னையென்று குறிப்பிட்ட போதிலும், ராவணனது ஒழுக்கக் குறைவைப் பொதுவாகக் கண்டித்துப் பேசினுன். வரம் பெறும் காலத்தில் மனிதரை வெல்லுமாறு வரம் கேட்கவில்லை யாதலால் ராமன் மூலமாகக் கேடு வரலாம் என்று தான் பேச்சுத் தொடக்கத்திலே குறிப்பிட்டான், பிறகு சாபங்களை நினைவூட்டினுன்.

தவறு செய்தோம் என்பதைத் தைரியமாக ஒப்புக் கொண்டு சீதையை விட்டு விடுவதே வெற்றி என்பதாகக் குணமென்னும் குன்றேறி நின்று பேசித் தானிருக்கும் சிகரத்தை நோக்கி அண்ணனையும் ஏறி வரச் செய்து விடலாம் என்று விபீஷணன் நம்பினுன். ராம பராக்கிரமத்தையும் வற்புறுத்தி ராவணனுக்கு விளங்கும் பாஷையில்தான் பேசினுன்.

'பாஞ்சாலி சபத'த்தில் திருதராஷ்டிரன் சகுனிக்கு விளங்காத பாஷையில் பேசினது போல் அவ்வளவு உருக்கமாக



மெய்ம்மறந்து அவதார தத்துவத்தை விபீஷணன் ராவணனுக்கு எடுத்துரைக்க வில்லை. இங்கே விபீஷணனுக்கு உள்ள ராம பக்தியைக் காட்டிலும் ராவணன் மீதுள்ள அபிமானமே புலனுகிறது.

மாண்டானு ?

எனினும் ராவணேசுவரன் விபீஷணனுடைய ஆஸ்திக புத்தியை உடனே கண்டித்து, அவதாரத்தைக் குறித்துத் தம்பி சொன்ன அந்த ஒரு வார்த்தைக்கு ஐந்து வார்த்தைகளில் ஆணித்தரமாகப் பதில் சொல்லி விட்டுக் கடைசியாகத் தனக்கே உரிய பரிகாச-பாணத்தையும் பிரயோகித்து, அவன் வாயை மூடி விடப் பார்க்கிருன்.

அறிதுயில் அமர்ந்த மூர்த்தி உண்மையில் அறிதுயிலும் தூங்கவில்லை; அறியாமைத் தூக்கமும் தூங்கவில்லை, விழிப்பே அறியாத அந்த நீண்ட உறக்கத்திலேயே அமர்ந்து விட்டான் என்ருன் வாய் கூசாமல். அப்படியில்லா விட்டால்,

இச்சைக்(கு) ஏற்றன
யான்செய்த இத்தனை
காலம்,
அந்தத் தெய்வம் சும்மா இருந்திருக்குமா !

இப்படிச் சொல்லி, அந்த 'முழுமுதலோன்' மூச்சற்றுப் போயிருக்க வேண்டும் என்பதை வெளிப்படையாகவும், அல்லது 'முழுமுதலோன்' முழுமகனுகத் தான் இருக்க வேண்டும் என்பதைக் குறிப்பாகவும் கூறினுன்

மைனரா ?

இனி, இச்சையே வரம்பாக இத்தனை காலமாய்த் தான் செய்து வந்த அதிக்கிரமங்களிலே முக்கியமாக நாற் பெருஞ் செயல்களைக் குறிப்பிடுகிருன் :



இந்தி ரன்தனை
இருஞ்சிறை யிட்டநாள்,
இமையோர்

தந்தி கோடிறத்
தகர்த்தநாள், தன்னையான்
முன்னம்

வந்த போர்தொறும்
துரந்தநாள், வானவர்
உலகைச்
சிந்த வென்றநாள்,
சிறியன்கொல் நீசொன்ன
தேவன் ?

[இருஞ்சிறை-பெரிய சிறை. இமையோர் தந்தி-தேவர்களால் திசைகளில் நிறுத்தப்பட்டிருக்கும் அஷ்ட் திக்கஜங்கள். கோடு - தந்தம். இற - முறிந்து போகும்படி. துரந்த-துரத்திய. சிந்த-சிதறுண்டு போகும்படி. சிறியன்கொல்-சிறியவனுயிருந்தானே,]



ஆயிரம் தலை ராவணனா இறைவன் ?

'தெய்வம் செத்துப் போய் விட்டதா! அல்லது நீ சொன்ன தேவன் அப்போது சிறியவனாக- "மைனர்" பையனாக-இருந்தானா?' என்று கேட்ட ராவணனும் வேதம் ஓதிய பிராமணன் தானே! எனவே புருஷ ஸூக்தம் நினைவிற்கு வருகிறது.

'புருஷோத்தமனுக்கு ஆயிரம் தலை, ஆயிரம் கண்கள், ஆயிரம் திருவடிகள்' என்றெல்லாம் ஆயிரம் ஆயிரமாக அந்த அனந்த சக்திக்கு வேதம் உறுப்பும் உருவமும் கற்பித்திருக்கிறதல்லவா! தெய்வத்தின் வரம்பில்லாத சக்தியையும் அறிவையும் அருளையும் அப்படிக் குறிப்பிடுகிறது வேதம். ஆயிரம் என்றால் அனந்தம். ராவணனுக்கோ ஆயிரம் என்னும் எண் அதே தொகைதான்.

தனக்குப் பத்துத் தலை இருப்பது போல் அந்தப் புருஷனுக்கும் ஆயிரம் தலை கணக்காக இருக்க வேண்டுமென்று பேசுகிறான். பத்துத் தலைக்கு இருபது கண்கள், செவிகள். கைகள்; ஆனால் இரண்டு கால்களே. வேதம் காட்டும் புருஷனுக்கோ தலை கண் கை கால் எல்லாம் ஆயிரம்!

ஸ்தூல ரூபம், ஸ்தூல சக்தி ஆகிய வற்றின் பெருமையே பெருமை என்று கருதும் ராவணேச்வரன், 'தலைகள் முத லான உறுப்புக்களை ஆயிரமாக உடைய வன் எதற்காக அவ்வளவு பலத்தையும் விட்டு, ஒரு தலை இருகை இருகால் பிராணியாகிய மானுட உருவத்தில் வர வேண்டும்! நாம் தின்று தீர்ப்பதற்கா?' என்று விபீஷணனைக் கேட்கிறான்:

ஆயி ரம்பெருந்
தோள்களும் அத்துணைத்
தலையும்
மாயி ரும்புவி
உள்ளடி அடக்குறும்
வடிவும்
தீய, சாலவும்
சிறிதென நினைந்து, நாம்
தின்னும்
ஓயும் மானுட
உருவுகொண் டனன்கொலாம்
உரவோன்?

[அத்துணைத் தலையும் – அந்தக் கணக் கான ஆயிரம் தலைகளும் கொண்டு. மாயி ரும் புவி – மிகப் பெரிய பூமியை. உள் ளடி அடக்குறும் வடிவும் – உள்ளடிக் குள்ளே அடக்க வல்ல பெரு வடிவத்தை யும். தீய சாலவும் சிறிது – தீயது; மிக வும் சிறுமையுடையது. ஓயும் – வலிமை குன்றிய. கொண்டனன் கொலாம் – கொண்டானோ. உரவோன் – வலிமை யுள்ளவனாகிய அந்தப் புருஷோத்தமன்.]

'இறைவன் இறந்தானோ, சிறுவனாக இருந்தானோ?' என்று கேட்டவன், 'ஆயி ரம் தலைகள் முதலியவற்றை ஒளித்து வைத்து நமக்கு உணவுப் பொருளாகிற மனித வடிவத்தில் வருவது ஏன்?' என்று ஒரு பரிகாச அம்பு போட்டு விபீஷண னுடைய அவதாரக் கொள்கையை அடித்துத் தள்ளப் பார்க்கிறான்.

தோற்றவன் தானே?

எத்தனையோ போர்க் களக்தில் திரு மாலைத் தோல்வியுறச் செய்ததாக ஏற் கெனவே சொல்லி விட்டானல்லவா! கடைசியாகவும் அந்தத் தோல்விகளை நினைவூட்டுகிறான்.

திருமால் மட்டுமல்ல, சிவபெருமா னும் தோற்றுப் போய் விட்டாராம். எத்தனை தோல்வி, எத்தகைய தோல்வி!

ராவணன் பெயரைக் கேட்டாலே ஓடிப் போகிறார்களாம். தங்கள் வாக னங்களாகிய காளை மாட்டையும் கருட பட்சியையும் விரைந்து செல்லுமாறு அடித்துத் துரத்திய வண்ணம் புறங் கொடுத்து ஓடுகிறார்களாம்.

ராவணனுக்குத் தோற்றவர்கள் இப் போது ராவணன் பெயர் கேட்டே ஓடிப் போகிறார்கள். அவ்வளவு பயம் ஏற் பட்டு விட்டது, அந்தத் தோல்விகளின் பயனாக! இந்த நிலையில் ராவணனும் துரத்தஆரம்பித்து விட்டானும் — 'புலி, புலி' என்று கிலி பிடித்து ஓடிக் கொண் டிருந்தவனை அசல் காட்டுப் புலி ஒன்று துரத்தியது போல!

அவர்கள் வாகனங்களை அடித்துச் செலுத்திக் கொண்டு போவதால் அந்த ரிஷபமும், கருடனும் அலுப்பும் சலிப்பு மாய்த்தான் போய்க் கொண்டிருந்தன. ராவண பாணங்களும் முதுகில் பாய்ந்து அந்தப் பிராணிகளை மேலும் வேகமாய்த் துரத்தி விட்டன!

இந்த விதமாக எவ்வளவு சரித்திர விவரங்களுடன் திருமாலின் தோல்வி யையும் சிவபெருமானின் தோல்வியை யும் சித்திரிக்கிறான் ராவணன், நிகழாத 'கல்கத்தா இருட்டறை நிகழ்ச்சி'யைப் பிரிட்டிஷ் இந்திய சரித்திரம் சித்திரித் துக் காட்டுகிற மாதிரி,

'கல்கத்தா இருட்டறை' ஒரு சோக ரஸ நாடகம். ராவணன் சிவனையும் திரு மாலையும் வென்ற கம்ப நாடகமோ ஒரு நகைச்சுவைக் காட்சி:

பித்த னாகிய
ஈசனும் அரியும்என்
பெயர்கேட்(டு)
எய்த்த சிந்தையர்
ஏகுழி ஏகுழி
எல்லாம்
கைத்த ஏற்றினும்
கடவிய புள்ளினும்
முதுகில்
தைத்த வாளிகள்
நின்றுள, குன்றின்விழ்
தடித்தின்.

[ஈசன் — சிவபெருமான், அரியும் — திருமாலும். எய்த்த சிந்தையர் — ஏற் கெனவே ஏற்பட்டிருந்த பல தோல்வி களால் எய்த்துப் போன மனமுள்ளவர்க ளாய். ஏகுழி ஏகுழி எல்லாம்—தாம் ஓடிப் போகின்ற இடங்களில் எல்லாம். கைத்த ஏற்றினும்—வெறுப்புற்ற ரிஷ பத்திலும். கடவிய புள்ளினும்—ஏறிச் செலுத்தப்படுகிற கருடப் பறவை

யிலும். வாளிகள் — அம்புகள். தடித்தின்—இடிபோல்.]

இத்தகைய போர்கள் தன் திக்விஜயங்களின் இன்றியமையாத சரித்திரப் பகுதி என்பது ராவணன் குறிப்பு. இருவரும் ஓடிய ஓட்டமே அந்தப் போராட்டம். அப்படியிருக்க, திருமால் ராவணனைத் தனியே கொல்ல வந்திருக்கிறுன் என்பது எவ்வளவு மூடத்தனமான கொள்கை?


இந்தப் பிரசங்கத்தின் முடிவுரையில் ராவணன் நையாண்டியின் சிகரத்தில் ஏறி நிற்கிறுன். சிறகு கட்டிய அம்புகள் போலப் பறக்கின்றன விபீஷணனை நோக்கி! சிவபிரானையும் திருமாலையும் என்ன பாடு படுத்தின நையாண்டி அம்புகள்! சாது விபீஷணனைச் சும்மா விடுமா?

குன்றின் மேல் இடி விழுவது போல் கருடன் மீதும் நந்திதேவர் மீதும் தன் பாணங்கள் விழுந்தன என்பது ராவணனுடைய கற்பனைச் சித்திரம். இப்போது நிஜமாகவே அந்த இடி விழுகிறது, ஏளனப் பேச்சாகவும், ஏளனச் சிரிப்பாகவும் :

'வெஞ்சி னம்தரு
போரின்எம் உடன்எழ
வேண்டா;
இஞ்சி மாநகர்
இடம்உடைத்(து), ஈண்(டு)
இனி(து)
இருத்தி;
அஞ்சல், அஞ்சல்?' என்(று)
அருகிருந் தவர்முகம்
நோக்கி,
நஞ்சின் வெய்யவன்
கைஎறிந்(து) உரும்என
நக்கான்.

[வெஞ்சினம் தரு – கொடிய கோபம் தருகின்ற. இஞ்சி-மதில். ஈண்டு-இங்கு. அஞ்சல் – அஞ்ச வேண்டாம். நஞ்சின் வெய்யவன் – நஞ்சு போல் வெய்யவனுகிய ராவணன். கை எறிந்து-கை தட்டி. உரும் என – இடியிடிப்பது போல்.]

சிறையை விட்டு விடுவதே வெற்றியென்று விபீஷணன் பேசிய அறவுரையை இடித்துத் தள்ளிய அதே இடிதான், விபீஷணனது அவதாரக் கொள்கையையும் தகர்த்தெறியப் பார்க்கிறது. ஆனுல் இதற்கு அஞ்சுபவனு விபீஷணன்?



பி. ஸ்ரீ.

104. கதை ஏன்?

விபீஷணன் தன் ஆலோசனையைத் தெரிவித்து விட்டான், மந்திராலோசனை மன்றத்திலே. அதற்கு ராவணனும் 'முட்டாள்' ('உணர்விலி') என்ற பட்டம் கொடுத்துச் சுடச் சுடப் பதிலும் கொடுத்து விட்டான்.

கடைசியாக, 'நீ போருக்குப் பயந்து தான் மனிதனுக்குத் 'திருப்புகழ்' பாடுகிறாய் என்று தோன்றுகிறது. அப்படியானால் எங்களுடன் போர்க்களத்திற்கு வரவேண்டாம்' என்றான்.

விபீஷணனுக்கு ராவணன் அபயதானமா?

'இந்த நகரில் தானே நீ தங்கியிருக்கலாம் சுகமாக' என்றான்.

> இஞ்சி மாநகர்
> இடமுடைத்(து); ஈண்(டு)
> இனி(து)
> இருத்தி!

[இஞ்சி – மதில். இருத்தி – இருப்பாய்.]

என்று கூறுவதில்தான் எவ்வளவு பரிகாசம்!

'மதில் சூழ்ந்த மாநகரில் நீ தங்கியிருக்க இடவசதி உண்டு' என்று சொல்லி விட்டு, அருகே மறைவில் இருந்த அந்தப்புரக் கட்டிடத்தைச் சுட்டிக் காட்டி,

> ஈண்(டு) இனி(து) இருத்தி

— இதோ இங்குத் தானே இனிமையாகத் தங்கியிருப்பாய் — என்று சொன்னதாக ஊகிக்கலாம்.

'அந்தப்புரத்திலே வாய்க்கினிய உணவுப் பொருள்களைச் சுவைத்துக் கொண்டு தங்கியிருக்கலாம்' என்று ராவணன் சொன்னதாகவும் ஊகஞ் செய்யலாம். இனி, 'ஈண்டு இனிது இருத்தி' என்றதை அடுத்து,

> அஞ்சல், அஞ்சல்!

என்றதற்கும் உட்பொருளை ஊகித்துப் பார்க்கலாம்.

இதற்கு, 'நீ இங்கும் அஞ்சிக் கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை; அந்தப்புரத்திலுள்ள பெண்கள் துணையாக இருப்பர்!' என்று ஒரு தொனிப் பொருளும் கொள்ளலாம். இப்பொருளைப் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை தமது 'மனோன்மணீய'த்தில் வெளிப்படையாக ஓரிடத்தில் அமைத்திருக்கிறார்.

'அஞ்சாதே, அஞ்சாதே!' என்று விபீஷணனுக்கு அபயதானம் செய்வது போல் பேசி விட்டு உடனே, 'அருகிருந்தவர் முகம் நோக்கி'னன் ராவணன் என்று கூறுவதில், விபீஷணனை இழிவுபடுத்திய பரிகாசத்தின் உச்ச நிலையைக் காண்கிறோம். பிறகு கை தட்டி இடிச் சிரிப்புச் சிரித்ததெல்லாம் ராவணனுக்கே உரிய ஒரு சிறப்பியல்பு தான்.

இத்தகைய இடிச் சிரிப்பை இதே மந்திராலோசனை மன்றத்தில், இதே விபீஷணனின் வேறொரு கொள்கையைப் பரிகசிக்க ராவணன் ஏற்கெனவே உபயோகித்துப் பலன் கண்டிருக்கிறான்.

இங்கே ஒரே அடியில் குறிக்கப்படும் எளனச் சிரிப்பு அங்கே ஒரு பாட்டை முழுக்க நிரப்பி விட்டது. இங்கே 'கை யெறிந்து' என்று வருவது அங்கே 'கரத்தொடு கரதலம் கிடைப்பப் பூட்டி' என்பதாகக் காணப்பட்டது.

அப்போது 'சீதையை விட்டு விடுவதே விஜயம்!' என்ற அந்தக் கொள்கை தான்

அந்த ராவணுகாரமான முழுச் சிரிப்புக்கும் இலக்காயிற்று. இப்போதோ 'விபீஷணனுடைய பெருங் கொள்கைகளெல்லாம் கோழைத் தனத்தில் ஊறிப் பிறந்தவையே!' என்ற உணர்ச்சி, கைதட்டி இடிச் சிரிப்புச் சிரிப்பதற்குக் காரணமாகிறது.

இந்தச் சிரிப்பையும் இப்போது விபீஷணனை நோக்கிப் பிரயோகிக்கவில்லை ராவணன். இந்தத் தம்பி, முகம் பார்த்துப் பேசவே இனிமேல் தகுதியற்றவனுகி விடுகிறுன்.

அருகிருந்தவர் முகம் நோக்கி விபீஷணனைச் சிரித்து ஒதுக்கி விட்டவன், இப்படியே மந்திராலோசனையை முடித்துக் கொண்டு போர்முயற்சியில் ஈடுபடப் புறப்பட வேண்டியது தானே? ஆனுல் கம்ப ராமாயணத்தில் இப்போது அப்படி ஒன்றும் நடந்துவிடவில்லை.

இருவர் போக்கு

ராவணனையும் விபீஷணனையும் வாசகர் மறந்து போகும்படி ஒரு கதை சொல்லத் தொடங்கி விடுகிறுன் கம்பன். வால்மீகத்திலோ, வேறு ராம கதையிலோ காணப்படாத கதை.

விபீஷணன் இந்திரஜித்தைக் கண்டித்து ராவணனை நோக்கிச் சீதையை விட்டுவிடச் சொல்வதும், அதற்கு ராவணன் விபீஷணனைப் பழித்துக் கடுமையாக விடை கூறுவதும், அப்பால் விபீஷணன் நால்வரோடு அங்கிருந்து எழுந்து ராவணனுக்கு மீண்டும் புத்திமதி சொல்லி ராமனைச் சரணமாக அடையப் புறப்படுவதும் வால்மீகத்திலே இடையருத ஒரு நிகழ்ச்சித் தொடராக ஒரே நேர் கோட்டில் நடந்த வண்ணமாயிருக்கின்றன. கம்பனே இந்த நேர்முறைக்கு மாறுபட்டுத் தனது சித்திரத்தை அமைக்கிறுன்.

இந்தக் கட்டத்திலே பெரிய மாறுதலைச் செய்ய விரும்பும் கம்பன், ஸ்தூலமாகப் பார்ப்பவர்களுக்கு வால்மீகியின் அடிச்சுவடுகளிலேயே சென்றுகொண்டிருப்பது போல் ஒரு தோற்றமும் காட்டிக் கொண்டான்.

உதாரணமாக, இந்திரஜித்தை விபீஷணன் கண்டிக்கும் போது, 'குழந்தாய், நீ இன்னும் சிறு பிள்ளைதான், உனக்குப் புத்தி நன்ருய் உதிக்கவில்லை. ஆகையால் ஆலோசிக்கும் ஆற்றல் உனக்கு வரவில்லை' என்று பேசத் தொடங்கினுன், வால்மீகத்திலே. கம்பன்



இதை ஒருவாறு மொழி பெயர்த்தமைத்துக் கொள்கிறான்.

இந்திரஜித்தைக் 'கற்பிலாப் பாலன் நீ' என்கிறான் விபீஷணன்.

பிள்ளைமை விளம்பினை
பேதைநீ !

என்றும் தன் விபீஷணனைக் கம்பன் பேச வைக்கிறான்.

"மந்திரத்து (மந்திராலோசனைச் சபையில்) இருத்தியோ, இளமையால் முறைமை எண்ணிலாய்!' என்றும் விபீஷணன் இந்திரஜித்தைக் கண்டிப்பதாய்க் கம்பன் காட்டுகிறான். மகரிஷி போகும் அந்தப் பெருவழி பிடித்தே தானும் போவதாக வாசகருள்ளத்தில் ஒரு நம்பிக்கை உண்டாக்குவது இத்தகைய சிறு மொழி பெயர்ப்பு – முயற்சிகளின் நோக்கம்.

இத்தகைய சான்றுகளைக் கொண்டு கம்பனின் காவியம் ஒரு வகை மொழி பெயர்ப்பு என்றோ, தழுவல் என்றோ கூறத் துணிவது அறியாமையின் துணிவு தான் !

விபீஷணன் இந்திரஜித்தை அதட்டிக் கண்டித்தபின் ராவணன் தன் மகனுடைய கட்சியை ஆதரித்து விபீஷணனை நோக்கிக் கடுமையாகப் பழித்துப் பேசியதாக வால்மீகி கூறியுள்ளார். கம்ப ராமாயணத்திலோ இப்படி மகனை ஆதரித்து ராவணன் ஒன்றும் பேசிவிட வில்லை.

ராவணனை நோக்கி ராவணன் செயலைக் கண்டித்துச் சீதையை விடுவது தான் வெற்றி என்று விபீஷணன் கூறிய பின்பே ராவணன் விபீஷணனைப்பழித்து உரையாடுகிறான் கம்பன் காவியத்திலே.


இந்தப் பழிப்புரையிலே வால்மீகம் பங்காளிக் காய்ச்சலை வற்புறுத்துகிறது. கடைசியாக, 'வேறொருவன் இவ்வண்ணம் பேசியிருந்தால், அவன் அந்த நிமிஷத்திலேயே அழிந்து போயிருப்பான்; 'நீ குலத்தைக் கெடுப்பவன்' என்கிறான் வால்மீகியின் ராவணன்.

இப்படி ராவணன் சொன்னதும் 'விபீஷணன் தன் கதாயுதத்தைக் கையிலெடுத்துக் கொண்டு தன்னைச் சேர்ந்த நான்கு அரக்கர்களுடன் உயர எழுந்தான்' என்பது வால்மீகி வாக்கு. விபீஷணன் துணைவருடன் வானத்திலே எழுந்ததைக் கம்பனும் பிரஸ்தாபிக்கப் போகிறான். அவர்கள் நால்வர் என்பதையும் குறிப்பிடப் போகிறான்.

வானத்தில் கிளம்பி நின்ற விபீஷணன் கோபங் கொண்டவனாய்த் தமையனை நோக்கிப் பேசுகிறான், கடிந்து பேசுகிறான் கடைசியாக. இந்தப் பேச்சு வால்மீகத்திலே அமைந்திருக்கும் விதத்தைக் கவனிப்போம்.

'அரசே, என் தமையனாராக இருக்கிறீர்கள். தமையனார் மரியாதைக்கு உரியவர்; தந்தைக்குச் சமானர். ஆனால் தாங்கள் அறவழியில் நிற்கவில்லை. இப்போது என்னை நோக்கிக் கடிந்துரைத்த சொற்களெல்லாம் பொய்யானவை. அவற்றை என்னால் பொறுக்க முடியவில்லை' என்று தொடங்குகிறது இந்த விபீஷணன் பேச்சு.

பிறகு தம்பி அண்ணனை நோக்கி, 'தங்கள் நன்மையை நாடி நீதிகளை எடுத்துரைத்தேன். நல்லறிவில்லாதவர்கள் இதங்களை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள், இனிமையாகப் பேசுவோர் எங்கும் கிடைப்பர். இதம் சொல்



வோர் அரியர். அழியப் போகின்ற தங்களை அப்படியே பார்த்துக் கொண்டிருக்க மனம் இல்லாதவனுய் நான் இவ்வளவு தூரம் பேசினேன்' என்கிருன்.

ராமபாணங்களால் ராவணன் மாண்டு போவதை மனக்கண்ணுல் காண்பது போல் விபீஷணன் எச்சரிக்கை செய்கிருன். தீப் பற்றி எரியும் வீட்டிலே சிக்கிக் கொண்டவனைப் போல் காலபாசத்திலே சிக்கிக்கொண்டு ராவணன் அழியப் போவதாக ஒரு பகற் கனவு காண்கிருன்.

மணலால் கட்டிய கரை சிதறுவது போல் போரில் கரைந்துவிட இருக்கும் சூரர்களெல்லாம் விபீஷணனுடைய மனக் கண்ணுக்கு எதிரே ஒரு சோக பவனி வருகிருர்கள்!

இந்தப் பேச்சின் இறுதிப் பகுதியை வால்மீகி பொருத்தமாகவும் உருக்கமாகவும் அமைத்திருக்கிருர். 'தங்கள் நன்மையை நாடி நான் இதுவரையில் சொன்னதை, விரோதமாகத் தோன்றினுலும், தாங்கள் பெரியவராதலால் பொறுத்துக் கொள்ள வேண்டும்' என்று விபீஷணன் ராவணனை மன்னிப்பு வேண்டுகிருன். உடனே 'தங்களையும் இந்த நகரத்தையும் இதில் வசிக்கும் அரக்கர்களையும் எப்படியாவது பாதுகாத்துக் கொள்ளுங்கள்' என்கிருன்.

'எப்படியாவது உங்களுக்கு க்ஷேமம் உண்டாக வேணும்; நான் போகிறேன். என்னை விட்டு எப்படியாவது சுகமடையுங்கள்' என்கிருன்.

இதே மூச்சில், 'தங்கள் நலத்தை நாடி நான் எவ்வளவோ தடுத்துக் கூறியும் என் சொற்கள் தங்கள் மனத்திற்குப் பிடிக்கவில்லை. ஆயுள் முடியும் நிலையில் இருப்பவர்கள் நண்பர்கள் சொல்லும் இதமான சொற்களை ஒருபோதும் கேட்க மாட்டார்களல்லவா?' என்று கூறி முடிக்கிருன்.


"ராவணன் தம்பியாகிய விபீஷணன் இவ்விதமாகக் கடிந்துரைத்து, ஒரு முகூர்த்த காலத்திற்குள் ராம லட்சுமணர் இருந்த இடத்திற்கு வந்து சேர்ந்தான்' என்று கூறி வால்மீகி, 'விபீஷண சரணுகதி' விவரங்களைச் சொல்லப் போகிருர். கம்பனே தன் விபீஷண குணசித்திரத்திற்கு இந்த முறை முற்றும்நீதி செலுத்துவதாகாது எனக் கருதுகிருன். இப்படிப் பல பல உறுதிச் சொற்களை விபீஷணன் வழங்கிச் சென்ருலும் போதாது என்று நினைக்கிருன்.

வால்மீகி காலத்திற்குப் பின் ராமாயணம் என்னும் ஞான கங்கை எவ்வளவோ பொங்கிப் பெருகிப் பரந்து பாய்ந்து வந்திருக்கிறது, வடக்கேயிருந்து தெற்குத் திசையிலும், மீண்டும் தெற்கேயிருந்து வடக்குத் திசையிலுமாக. அப்போது, ராமன் அவதார மூர்த்தியாகப் பெரும் புகழ் பெற்றிருந்தது போல், விபீஷணனும் பரம பாகவதனுக—பக்தர்களுக்கு ஓர் இலக்கியமாகப் புகழப் பெற்ருன். தமிழகத்தின் பக்த மணிகளான ஆழ்வார் ஆசாரியர் வாயிலாக இந்த நிலையில் விபீஷணனைத் தெரிந்து கொண்ட கம்பன், விபீஷண குணுதிசயத்தைப் பெரிதும் திருத்தியமைக்க ஆசைப்படுகிருன்.

இதற்காகத்தான் கம்பன் விபீஷணனையும் ராவணனையும் மறந்துவிட்டது போல் ஒரு நீண்ட கதை சொல்லப் போகிருன். இதில் கம்பன் வளர்த்துக் காட்டும் விபீஷண குணுதிசயத்தின் திறவு கோலைப் பார்க்கலாம். எப்படி?

விபீஷணனை முகம் பார்த்து நகையாடவும் தகுதியற்றவனுகக் கருதி அலட்சியம் செய்தவன், அந்தத் தம்பியின் நீண்ட கதையை அமைதியாகக் கேட்பதேன்?

கேள்விகள் ஒரு புறம் இருக்கட்டும். ராவணன் தன்னை மறந்து கதை கேட்கத் தயாராகிவிட்டான். நாமும் தயாராக வேண்டியதுதான்!



பி. ஸ்ரீ.

105. விபீஷண வைத்தியம்

விபீஷணன் சொல்லத் தயாராயிருக்கும் கதை, ராவணன் கேட்கத் தயாராயிருக்கும் கதை இரணியன் கதை தான். 'தன்மானத் தனி வீரன்' என்று இன்றைய 'பகுத்தறிவாளர்' சிலரும் கொண்டாடுகிறார்களே, அந்த இரணியன் கதை.

விபீஷணன் தர்மோபதேசம் செய்து பார்த்தான்: அவதார தத்துவத்தை வெளியிடப் பார்த்தான்; இடையே 'வல்லவனுக்கு வல்லவன் ராமன்' என்பதாக அந்த வீர பராக்கிரமத்தையும் வற்புறுத்திப் பார்த்தான். கைலையையும் அசைத்துப் பார்த்த உள்ளம் சற்றும் அசையவில்லை. இந்த நிலையில் இரணியன் கதை சொல்லப்படுகிறது.

அதிர்ச்சி வைத்தியமா?

அதிர்ச்சியை உண்டாக்கிச் சில பைத்தியக் கோளாறுகளைக் குணப்படுத்தலாம் என்பது வைத்திய சாஸ்திரிகளின் அனுபவம். இந்த முறையில் விபீஷணன் கடைசியாக ராவணனுக்குப் புத்தியைத் தெளிவிக்கலாம் என்று கருதுகிறான்.

அதிர்ச்சி வைத்தியத்தில் சில கொடிய மருந்துகளைப் பயன்படுத்திக் கொள்வோருண்டு. விபீஷணன் ராவணனை நோக்கி, 'ஐயனே, உன் வலிமையைக் காட்டிலும் மேம்பட்ட வலிமை படைத்தவர்கள் — உன்னைக் காட்டிலும் பெரியவர்கள் — தெய்வ கோபமாகிய தர்மாவேசத்திற்கு முன் நிற்க முடியாமல் கிளையோடு முடிந்து போனார்கள்' என்று மனம் அதிர எச்சரிக்கை செய்யப் பார்க்கிறான்.

இன்று மின்சாரத்தினால் விளைவிக்கும் அதிர்ச்சியை மிகச் சிறந்த சிகிச்சை முறையாகக் கருதுகிறார்கள். அப்படியே விபீஷணனும் தன் அதிர்ச்சி வைத்திய முறைகளில் சிறந்ததாக இரணியன் கதையை மதிக்கிறான்!

'நான் இன்னும் உன்னிடம் கூற வேண்டியது இரணியன் கதைதான்' என்று சொல்லி அக் கதையைச் சொல்லத் தொடங்குகிறான்:

பின்னும் வீடணன்,
'ஐய, நின் தரம்அலாப்
பெரியோர்

முன்னை நாள்அவன்
முனிந்திடக் கிளையொடு
முடிந்தார்;

இன்னம் உண்டு யான்
இயம்புவ(து): இரணியன்
என்பான்

தன்னை உள்ளவா
கேட்டி' என்(று) உரைசெயச்
சமைந்தான்.

[தரம் அலா – தரம் அல்லாத: தரத்திற்கும் மேலான. அவன்– அந்தத் தெய்வம்: அந்த மகா விஷ்ணு. கிளையொடு– சுற்றத்தாருடன். இரணியன் என்பான் தன்னை – இரணியன் என்பவனைப்பற்றி. உள்ளவா – நிகழ்ந்துள்ள விதத்தை. கேட்டி – கேட்பாய். உரைசெயச் சமைந்தான் – அந்த வரலாற்றைச் சொல்லத் தொடங்கினான்.]

இந்த அதிர்ச்சி வைத்திய முறையில் ஒருவருக்கும் ஆபத்து வரப்போவதில்லை யென்பது விபீஷணன் கருத்து. இரணியனுக்கு வந்த ஆபத்து மின்–எழுத்துக்களில் எச்சரிக்கையாகக் காப்பாற்றக் கூடுமே!

சில அதிர்ச்சி வைத்திய முறைகளில் சில மருந்துகளைக் கொடுப்பதால் உயிருக்கே ஆபத்து விளையும்; அல்லது கடுமையான இழுப்பு நோய் வரும் என்பர். ஆபத்து நோயாளிக்குத் தான்; வைத்தியனுக்கல்ல.

விபீஷணன் கையாளப் போகும் வைத்தியமோ வைத்தியனுக்கே ஆபத்தாகவும் முடியக் கூடுமே! எனினும் துணிந்து தான் சிகிச்சை நடக்கிறது. பயங்கரமான சிகிச்சை.

ஒரு சுதந்திரக் கதை

விபீஷணன் சொல்லும் இரணியன் கதை நீண்ட ஒரு தனிப் படலமாக அமைந்திருக்கிறது. 176 பாடல்களில். கடைசிப் பாட்டிலே தான் விபீஷணன் இந்தக் கதையைச் சொல்லி முடிக்கிறான் என்ற பிரஸ்தாபம் வருகிறது.

175 பாடல்களிலும் விபீஷணன் பேசுவதாகவோ, ராவணன் கேட்பதாகவோ ஒரு குறிப்பும் காணப்படவில்லை. ராமாயணப் போக்குடன் அவயவ சம்பந்தமில்லாத ஏதோ ஒரு கதையையிடையே செருகி வைத்திருப்பது போலத்தான் வாசகர்களுக்கு உணர்ச்சி ஏற்படுகிறது.

இரணிய பராக்கிரமம் முதல் பதினெட்டுக் கவிகளில் வருணிக்கப்படுகிறது. பிரகலாதன் பிறப்பதும், பக்தியை வெளியிட்டு நாராயண நாமம் சொல்வதும், இரணியன் ஹிம்ஸிப்பதும், 'ஹிம்ஸிக்கிறவன் ஹிம்ஸிக்கப்படுவான்' என்னும் விதிக்கிணங்க இரணியன் கதி ஏற்படுவதும், வேறு விவரங்களும் எல்லாம் ஒரு தனிக் கதையின் பகுதிகளாகவே வருணிக்கப் படுகின்றன.

விபீஷணன், ராவணன் முதலானவர்களை மறந்து விடுகிறோம். இரணியன் பிரகலாதன் முதலியவர்களுக்கிடையே தான் மானஸ சஞ்சாரம் செய்கிறோம்.

பிரகலாதனுக்கு முடிசூட்டு வைபவத்துடன் கதை முடிகிறது.

> கோமன் னவனுசி
> மூவுலகும் கைக்கொண்டான்

என்று கதையை முடிக்கும்போது, 'இது ஒரு தனிக் கதை தான்' என்றும் அபிப்பிராயம் உறுதிப் படுகிறது.

இக் கதையை ராமாயணப் போக்குடன் கடைசியாக இணைப்பது இப்படலத்தின் இறுதிப் பாட்டு:

> 'ஈதாகும் முன்நிகழ்ந்த(து);
> எம்பெருமான்! என்மாற்றம்
> யாதானு மாக
> நினையா(து) இகழ்தியேல்,
> தீதாய் விளைதல்நனி
> திண்ணம்' எனச் செப்பினன்,
> மேதாவி கட்கெல்லாம்
> மேலான மேன்மையான்.

[ஈதாகும் – இது ஆகும். முன் நிகழ்ந்தது – முன்பு அந்தக் காலத்திலே நடந்தது. எம்பெருமான் – எம்பெருமானே; எங்கள் தலைவனே. என் மாற்றம் – என் வார்த்தையை. யாதானுமாக நினையாது – கொஞ்சமும் நினைத்துப் பாராமல். இகழ்தியேல் – இகழ்வாயானால். நனி திண்ணம் – மிக நிச்சயம். மேதாவிகட்கெல்லாம் – மேதாவிகளுக் கெல்லாம்.]

'இரணியன் வதைப் படல'த்தின் இறுதிச் செய்யுள் இது. 'இராவணன் மந்திரப் படலம்',

> 'இன்னம் உண்டு, யான்
> இயம்புவ(து); இரணியன்
> என்பான்
> தன்னை உள்ளவா
> கேட்டி'என்(று) உரைசெயச்
> சமைந்தான்

என்று முடிந்ததல்லவா!

இப்படி ஒரு படலத்தின் இறுதியில் விபீஷணன்தான் சொல்லப்போவதாகத் தோற்றுவாய் செய்து கொண்ட இரணியன் கதை, தனக்குரிய நீண்ட படலத்தின் இறுதிச் செய்யுளிலேதான் கதை சொல்லுகிறவனை மீண்டும் நினைவூட்டுகிறது. கதை கேட்பவனையும் அப்போது தான் ஞாபகப் படுத்துகிறது.

இரணியன் யார்?

'இரணியன்' என்ற சொல்லுக்குப் 'பொன்னிறமானவன்' என்று பொருள். வடமொழியில் 'ஹிரண்யன்'. இவனை 'இரணிய கசிபு' என்றும், இவனது தம்பியை 'இரணியாட்சன்' என்றும் சொல்துண்டு.

திருமாலின் நரசிம்மவதாரத்தில் கொல்லப்பட்டவன் இரணியகசிபு; வராகாவதாரத்தில் கொல்லப்பட்டவன் இரணியாட்சன்.

திருமாலின் வாசல் காவலரான ஜய விஜயர்களே சாபத்தால் இரணியனும்

இரணியாட்சனுமாயினர் என்பது புராணம். எனவே, இக்கதைகளில் புதை பொருளாக ஆரிய திராவிட விவகாரங்களையோ, வேறு சரித்திர மூலங்களையோ காண முயல்வது அறியாமை; அனர்த்தமும்கூட.

லோக பயங்கரனாய் 'வலிமையே உரிமை' என்று ஹிம்சை நெறியில் செல்வோன் எத்தகைய செல்வமும் செல்வாக்கும் பெற்றிருந்தாலும், ஆயுத பலம் பெற்றிருந்தாலும், வர பலம் பெற்றிருந்தாலும் அழிந்து போவான் என்பது இரணியன் கதையின் உட்பொருள்.

பிரகலாதன் யார்?

இரணியன் கதை இந்த நாணயத்தின் ஒரு பக்கம் தான். பிரகலாதன் கதை மறு பக்கம். ஸாக்ரடிஸ் மகானை 'அறிவுச் சுதந்திரத்திற்காக உயிர்த் தியாகம் செய்தமுதல்வர்' எனக் கூறுவதுண்டு. பிரகலாதனைப் பக்தர்கள் தங்களுக்கு ஒரு லட்சிய புருஷனைக் கொள்வர்.





காந்தி மகான் 'ஸத்யாக்கிரக முதல்வர்' என்று பிரகலாதனைத் தமக்கும் ஒரு லட்சியமாகக் கொண்டார். ஸாக்ரடிஸ் என்ற சரித்திர புருஷனைப் போல் பிரகலாதன் என்ற புராண புருஷனும் மக்களின் சன்மார்க்க வாழ்க்கையை உருவாக்கும் வசீகர ஆற்றல் பெற்றவன் என்பதற்கு மகாத்மாவின் வாழ்க்கையே ஒரு பெருஞ்சான்று.

பிரகலாத சரித்திரம் போன்ற புராணக் கதைகள் வாடாத அழகும் மார்க்கண்ட இளமையும் வாய்ந்தவை. இக்கதைகளிலே வேஷமோ துவேஷமோ ஆய்வது தாய்ப்பாலில் நஞ்சு காண்பதுதான்.

பிரகலாத சரித்திரம் காந்திமகானை ஆட்கொண்டது போல் கம்பனுள்

ளத்தையும் இளமையிலேயே கவர்ந்திருந்ததென்று ஊகிக்கலாம். கம்பன் ராம பக்தனுவதற்கு முன்பே திருமாலின் பக்தனுகிப் பிரகலாதன் கதை கஜேந்திரன் கதை முதலியவற்றில் ஈடுபட்டிருந்தான் எனலாம்.

காவியத்தில் கதையின் ஸ்தானம்

பிரகலாத சரித்திரத்தைத் தன் வாழ்க்கையின் முற்பகுதியிலே, ராமாயணம் பாடுவதற்கு முன்பே, பாடி வைத்திருந்தான் என்று ஊகிப்பதே சரியாகும். 'மனேன்மணீய' ஆசிரியர் தாம் ஏற்கெனவே பாடி வைத்திருந்த 'சிவகாமி சரித்திர'த்தைத் தமது நாடகத்தினிடையே பெய்து வைத்திருப்பது போல், கம்பனும் தான் ஏற்கெனவே பாடி வைத்திருந்த பிரகலாதன் கதையைத் தனது ராமாயணத்தினிடையே 'இரணியன் வதை படல'மாகச் சேர்த்துக் கொண்டிருக்க வேண்டும்.

'மனேன்மணீய' ஆசிரியர் தமது 'சிவகாமி சரித'த்தை இன்றியமையாத சிற்சில மாறுதல்களுடன் நாடகத்தினிடையே சேர்த்துக் கொண்டிருக்கிருர். கம்பனும் 'யுத்த காண்ட'த்திலே 'இரணியன் வதைப் படல'த்தைச் சேர்த்துக் கொள்ளும்போது சில மாறுதல்களைச் செய்து கொண்டிருக்க வேண்டும்.

'யுத்த காண்ட'த்திலே காணும் பழுத்த வாக்கின் சக்தியை 'இரணியன் வதைப் படல'த்திலுள்ள சிலபாடல்களிலும் காண்கிருேம்: இனி, இதற்குரிய ஸ்தானம் தான் என்ன?

தன் வீர காவியத்தை ஒரு ஞானப் பெருங் கோயிலாகக் கட்டி நிறுத்திய கவிஞன், இக் கோயிலுக்கு முன் வாசற் பூஞ்சோலையாக முதல் காண்டமாகிய 'பால காண்ட'த்தை அமைத்துக் கொண்டான், 'அயோத்தியா காண்டம்' முதல் 'சுந்தரகாண்டம்' ஈருகவுள்ள நாலு காண்டங்களும் சேர்ந்தது இக் கோயிலின் கட்டடம்.

கோபுரமாக நிமிர்வது 'யுத்த காண்டம். இந்தக் கோபுரத்திலே ஒட்டியும் ஒட்டாமலும் ஏதோ ஒரு வெற்றிக் கொடி போல் பறந்து கொண்டிருக்கிறது 'இரணியன் வதைப் படலம்' என்ற பிரகலாத சரித்திரம்.

விபீஷணனுடைய வெற்றிக் கொடி இது. எப்படியாவது ராவணனை நல்வழிப்படுத்தும் முயற்சியில் வெற்றி பெறவேண்டும் என்ற சங்கற்பத்துடன் பறக்கவிட்ட கொடி.

இந்த நோக்கம் முற்றும் தவறி விட்டது. எனினும் விபீஷணனுக்கு வெற்றி தானே. ஸத்யாக்ரகத்திற்குத் தோல்வி ஏது!

நரசிங்கத்தின் உக்கிரத்தையும், இரணியன் கொடுமை பெருங் கொடுமையால் அழிந்ததையும் பயங்கரமாகச் சித்திரித்துக் காட்ட 'மின்சார' வாக்கை உபயோகித்துப் பார்க்கிருன் விபீஷணன்,– இப்போது மின்சாரத்தை அதிர்ச்சி வைத்தியத்திற்குப் பயன்படுத்துவது போல. ஆனுல் ராவணனுடைய 'மனக் கோளாறு' நீங்கிவிடவில்லை.

மின்சார அதிர்ச்சியில் நோயாளி உடனே நினைவிழந்து போவான்; விழிக்கும் போது சிகிச்சை – விஷயம் நினைவுக்கு வராது. அப்போது வைத்தியர் பேசி உளச்சிகிச்சை செய்து குணப்படுத்துவார். ஆனுல் ராவணன் தன் நினைவுகளை இழக்கவுமில்லை; விழித்துக் கொள்ளவும் இல்லை.

விபீஷணனின் பேச்சு – வைத்தியம் பயன் படவே யில்லை. அதிர்ச்சிக்கும் அதிர்ச்சியாக வரப் போகிறது ராவண கோபம் —அந்த அதர்ம ஆவேசம்.

இப்போது ராவணனை விட்டு, விபீஷணனையும் விட்டு விட்டு, இரணியனையே பார்த்து விடுவோம்.